பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 15 புதன்கிழமை 01.12.2021 கதிர் 254

## காலியில் வெடித்தது எரிவாயு சிலிண்டர்!

காலி மாவட்டம், உடுகமை பகுதியில் உள்ள வீடொன்றில் இன்று அதிகாலை எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

குறித்த வெடிப்புச் சம்பவத்தில் வீட்டில் இருந்த எந்தவொரு நபருக்கும் பாதிப்புகள் ஏற்பட வில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக தமிழ் முற்போக்குக் கூட்டணி அங்கீகாரம்

### 'மின்சூள்' சின்னம்; நமது மக்களின் வெற்றி என்கிறார் மனோ



தேர்தல் ஆணைக்குழுவால், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஒரு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

'டோர்ச் லைட்' என்ற மின்சூள் சின்னம் கூட்டணியின் அதிகாரபூர்வ சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதத்தை தேர்தல் ஆணைக்குழு ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் செயலாளர் சந்திரா சாப்டருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இது பற்றி கூட்டணி தலைவர் மனோ எம்.பி. ஊடகங்களுக்குக் கூறியதாவது:- ☞ 2

## காணி அளவீட்டுக்கு இடையூறு விளைவித்தால் சட்ட நடவடிக்கை

### வடக்கு ஆளுநர் ஜீவன் எச்சரிக்கை



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

வடக்கில் முன்னெடுக்கப்படும் சட்டரீதியான காணி அளவீடுகள் உள்ளிட்ட அரச அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு தொடர்ந்தும் இடையூறு விளைவித்தால் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியேற்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தின், அபிவிருத்தி, பொருளாதார, சமூக மேம்பாடு உள்ளிட்ட காரணங்களை அடிப்படை ☞ 2




# நிலத்தைப் பறிப்பதும் எமது உயிரைப் பறிப்பதும் ஒன்றே

## வடக்கு ஆளுநருக்கு எதிராகக் காணி உரிமையாளர்கள் போராட்டம்

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

காணி அளவீட்டுப் பணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் முகமாக நடந்து கொள்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டோம் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கூறினார் என வெளியான செய்தியை அடுத்து யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகம் முன்பாக எதிர்ப்புப் ☞ 2

## காணி உரிமையாளர்களுடனான ஆளுநரின் சந்திப்பு திடீர் இரத்து!

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுடன் மாதகல் காணி உரிமையாளர்கள் சந்திப்பதற்கு இன்று ஏற்பாடுகள் இடம்பெற்று இருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்ட ☞ 2

## யாழில் இன்றும் வெடித்து சிதறியது எரிவாயு அடுப்பு

(ந.லோகதயாளன்)

யாழ். வட்டுக்கோட்டையில் வீடொன்றில் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறிய சம்பவம் பதிவாகியுள்ளது.

வட்டுக்கோட்டை, காளி கோயிலடியில் இன்று முற்பகல் இந்தச் சம்பவம் ☞ 2

## புத்தளத்தில் உணவகத்திலும் காஸ் அடுப்பு இன்று வெடிப்பு

புத்தளம், பாலாவி கரம்பை ஹூதா பள்ளி வீதியில் அல் ஹூதா பலர் பாடசாலைக்கு முன்பாக உள்ள உணவகத்தில் சமையல் அறையில் பயன்படுத்தப்படவிருந்த சமையல் ☞ 2

### தனங்களப்பு பண்ணை வீட்டில் இருந்து

## வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சடலமாக மீட்பு



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

யாழ்., வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உறுப்பினர், சாவகச்சேரி - தனங்களப்பு பகுதியில் உள்ள பண்ணை வீட்டில் இருந்து இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புத்தூர் வடக்கு, ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவபாலன் (வயது 51) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனங்களப்பு பகுதியில் தென்னம் தோட்டம் ☞ 2

## தலவாக்கலையிலும் காஸ் அடுப்பு வெடிப்பு



தலவாக்கலை, ஸ்கீம் பகுதியில் மேல் கொத்மலை புதிய வீட்டுத் தொகுதியிலும் இன்று முற்பகல் 10 மணியளவில் எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்துள்ளது.

தேநீர் தயாரிப்பதற்காக காஸ் அடுப்பைப் பற்ற வைத்த பின்பு அதனை, அனர்த்திவிட்டு குறித்த நபர் வெளியில் சென்ற ஒரு நொடியிலேயே இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளது ☞ 2

## பதிவு செய்யப்பட்ட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில், ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி, மலையக மக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சித் தலைவர்களால் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணி இன்று ஆறு ஆண்டுகளை கடந்த நிலையில், இடையில் இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்கள், ஒரு ஜனாதிபதித் தேர்தல், ஒரு உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆகியவற்றை வெற்றிகரமாக எதிர்கொண்டு இந்த நாட்டின் தேசிய அரங்கில் தவிர்க்க முடியாத ஓர் அரசியல் இயக்கமாக வளர்ந்து, இன்று தேசிய தேர்தல் ஆணைக்குழுவால் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளோம்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள், தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவம் கட்சிகள், தேசிய அரங்கில் ஒன்றுசேர வேண்டும் என்ற பேரவா இன்று தமிழ் முஸ்லிம் மக்கள் மனங்களில் ஆழமாக வேரூன்றி இருப்பதை நானறிவேன்.

எமது மக்களின் இந்த மன உணர்வுக்கு உயிர் கொடுத்து முழு நாட்டுக்கும் முன்மாதிரியாக நாம் இன்று நிற்கின்றோம்.

ஒற்றுமை நிலைக்க வேண்டும் என எதிர்பார்த்த பெருந்திரள் மக்கள் மத்தியில், இது தேர்தல் வரையிலான உறவு. ஆகவே, தேர்தல் முடிந்த பின் உடைந்து விடும், உடைய வேண்டும் என்று எதிர்பார்த்த விநோதமானவர்களும் நம் மத்தியில் இருந்தார்கள்; இருக்கின்றார்கள்.

அவர்களை நாம் இன்று ஏமாற்றி இருக்கின்றோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆகவே, கட்சிகள் ஒன்றுசேர வேண்டும், ஒன்றுசேர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படும், அதேவேளை இன்று ஒன்றுபட்டு நின்று, பல சவால்களுக்கு மத்தியில் ஆறு ஆண்டுகளை கடந்து, எம்மைவிட்டுப்பிரிந்தவர்களுக்கு துயருடன் விடை கொடுத்து விட்டு, புதியவர்களை உள்வாங்கி, எமது தேசிய பயணத்தை மாத்திரம் நிறுத்தி விடாமல் பயணித்து, இன்று அதிகாரபூர்வ பதிவையும், தமிழ் முற்போக்குக் கூட்டணி பெற்றுள்ளது.

இந்த வெற்றிக்குப் பின்னால் எங்கள் ஒவ்வொருவரினதும் கடும் உழைப்பு, நேர்மை, துணிச்சல், தூரப்பார்வை, நிதானம், இன உணர்வு ஆகியவை இருக்கின்றன.

எங்கள் மின்சூள் சின்னம், நாடு முழுக்க இருளை அகற்றி, ஒளி பாய்ச்சும் இயக்கமாக இன்னமும் முன்னேற்றம் பெற, அனைத்து உடன்பிறப்புகளினதும், இரத்தத்தின் இரத்தங்களினதும் வாழ்த்துகளையும், ஆதரவுகளையும் எதிர்பார்க்கின்றோம் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் என்ற முறையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றார்.

## யாழில் இன்றும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட எரிவாயு அடுப்பே வெடித்துச் சிதறியுள்ளது.

எனினும், வேறு சேதம் எதுவும் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சுன்னாகம் கந்தரோடையில் உள்ள வீடு ஒன்றில் இதே போன்ற சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமைபதிவாகியமைகுறிப்பிடத்தக்கது.

## நிலத்தைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக இன்று காணி உரிமையாளர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நிலத்தைப் பறிப்பதும் எம் உயிரைப் பறிப்பதும் ஒன்றே, எமது நிலம் எமக்கு வேண்டும், காணிகளை சுவீகரிக்காதே, ஆளுநரே காணி அபகரிப்புக்கு உடந்தையாகாதே போன்ற பல்வேறு கோஷங்கள் போராட்டக்காரர்களால் எழுப்பப்பட்டன.

போராட்டம் நடைபெற்ற அப்பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் புலனாய்வுப் பிரிவினரும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## தலவாக்கலையிலும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என மேற்படி நபர் தெரிவித்துள்ளார்.

வெடிப்பை அடுத்து காஸ் அடுப்பு முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், அதன்பின்னர் காஸ் சிலிண்டர் உள்ளிட்ட உபகரணங்களை அகற்ற நடவடிக்கை எடுத்தேன் என வீட்டின் உரிமையாளர் வேலுசாமி ஸ்ரீநாத் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் தலவாக்கலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வலி. கிழக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றைப் பராமரித்து வரும் அவர், தோட்டத்துடன் இணைந்த வீட்டில் வசித்தும் வந்துள்ளார்.

இந்தநிலையில், கடந்த சில தினங்களாக அவரின் நடமாட்டத்தை அயலவர்கள் அவதானித்து இருந்த நிலையில் இன்று வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியதை அடுத்து , வீட்டுக்குள் பார்த்தபோது அவர் உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இவர் சில தினங்களுக்கு முன்னரே உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## காணி அளவீட்டுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாகக் கொண்டு சட்ட திட்டங்களுக்கு அமைவாக அரச அதிகாரிகள் காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

எனினும், அண்மைய நாள்களில் மாதகல் போன்ற இடங்களில் அரச அதிகாரிகளின்செயற்பாட்டிற்குஇடையூறுகள் விளைவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மக்கள் பிரதிநிதிகள் இந்த விடயத்தில் தலையீடுகளைச் செய்துள்ளனர்.

காணி அளவீடுகளை மேற்கொள்வதில் அவர்களுக்கு கரிசனைகள் காணப்படுமாயின் அதுபற்றி கலந்துரையாடல்களைச் செய்வதற்கு நான் எப்போதுமே தயாராகவே உள்ளேன்.

அவ்வாறிருக்கையில், அரச அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு பங்கம் ஏற்படுத்துவதானது பொருத்தமற்ற செயற்பாடாகும்.

இவ்விதமான நிலைமைகள் தொடருமாக இருந்தால் வடக்கு மாகாணத்தின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தயங்கப்போவதில்லை - என்றார்.

## காணி உரிமையாளர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதும் திடீரென அந்தச் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகத்தால் காணி உரிமையாளர்களுக்கு இன்று மதியம் 2 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் காணி உரிமையாளர்களைச் சந்திக்கவிருக்கிறார் என கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் திடீரென அந்தச் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டது எனவும், நாளை காலை 8 மணிக்கு அந்தச் சந்திப்பு நடைபெறும் எனவும் ஒரு சில காணி உரிமையாளர்களுக்குப் பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இது தொடர்பாக வடக்குமாகாணஆளுநர்அலுவலகத்தில் நேரடியாகச் சென்று காணி உரிமையாளர்கள் கேட்டபோது, இந்தச் சந்திப்பு தொடர்பில் நமக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்றும், இந்தச் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டது தொடர்பாகவோ நாளை இந்தச் சந்திப்பு இடம்பெறுவது தொடர்பாகவோ எமக்கு எதுவும் தெரியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆளுநரைச் சந்திக்க தூர இடங்களில் இருந்து வந்த பொதுமக்கள் அலைக்கழிக்கப்பட்டமையுடன் அங்கிருந்த மக்கள் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை, மாதகலில் கடற்படையினருக்காகக் காணி அளவீடு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று பிற்பகல் 1.30 மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாகப் போராட்டம் ஒன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த போராட்டத்தை அடுத்தா சந்திப்பை ஆளுநர் ரத்து செய்தார் என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை.

## புத்தளத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிவாயுவில் ஏற்பட்ட கசிவால் அடுப்பு முழுமையாக இன்று வெடித்துச் சிதறியுள்ளது.

எனினும், இந்த வெடிப்புச் சம்பவத்தில் எவ்விதச் சேதங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.




நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# நிதி அமைச்சர் பொறுப்பு

இலங்கையின் நிதி அமைச்சர்கள் வரிசையில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர் றொனி டி மெல்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் – 1977 முதல் 1988 வரை – நிதியமைச்சர் பதவியில் இருந்தவர். அவரும் மஹிந்த ராஜபக்ஷவும் தான் இலங்கையின் சரித்திரத்தில் அதிகமாக – தலா பதினொரு தடவைகள் – நாட்டின் வரவு – செலவுத் திட்டங்களை சமர்ப்பித்தவர்கள்.

சிவில் நிர்வாக சேவையின் மிகவும் மதிக்கப்பட்ட அதிகாரியான றொனி டி மெல் அரசியலில் ஈடுபடுவதற்காக பதவியிலிருந்து விலகி, 1965 பொதுத் தேர்தலில் சு.க.வேட்பாளராக பிபிலைத் தொகுதியில் போட்டியிட்டு ஐ.தே.கட்சியிடம் தோற்றார். 1970 தேர்தலில் தெவிநுவர தொகுதியில் சு.க. வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற அவர், 1977 இல் அதே தொகுதியில் ஐ.தே.கட்சி வேட்பாளராக வென்றார். அத்தேர்தலில் வென்று ஆட்சியமைத்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, தமது நிதி அமைச்சராக றொனி டி மெல்லை நியமித்தார். அன்று முதல் ஜே.ஆர். ஆட்சிக்காலம் முழுவதும் றொனி டி மெல்லே நாட்டின் நிதி விவகாரங்களையும் கையாண்டார்.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் திறந்த பொருளாதாரக் கொள்கையை நாட்டில் நிலைநிறுத்தியமையுடன், அக்கொள்கைக்கு வடிவம் கொடுத்தவரும் நிதியமைச்சர் றொனி டி மெல்தான். விக்டோரியா, ரன்தெனிகல, கொத்மலை போன்ற மிகப் பெரிய திட்டங்கள், வீதி அபிவிருத்தி, வீடமைப்புத் திட்டங்கள், சுதந்திர வர்த்தக வலயம் என்று பல்வேறு பாரிய முயற்சிகளுக்கு நிதியைத் தேடித் திரட்டி ஒதுக்கிக் கொடுத்து அவற்றுக்கு உயிரூட்டிய நிதியமைச்சர் அவர்தான்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் பிரதமராக இருந்த ரணசிங்க பிரேமதாஸா நாடு முழுவதும் வீடமைக்கும்திட்டத்துக்குபிதாமகராகஇருந்துசெயற்பட்டார். அவரது வீடமைப்புத் திட்டங்களுக்கு நிதி அமைச்சர் றொனி டி மெல் போதிய நிதி ஒதுக்கி னாராயினும், அவர்கள் இருவருக்கும் இடையில் அர சியல் முரண்பாடு கடுமையாக இருந்தது.

1988 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாஸா வென்று, ஜனாதிபதியானதும் றொனி டி மெல் நாட்டை விட்டு வெளியேறி அஞ்ஞாத வாசம் செய்தார். 1993 இல் பிரேமதாஸா குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட பின்னர் தான் றொனி டி மெல் நாடு திரும்பினார். அதன் பின்னர் 1994 தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டு வென்ற றொனி, 2000, 2001 பொதுத் தேர்தல்களிலும் அந்த ஆசனத்தைத் தக்க வைத்துக் கொண்டார்.

1988 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாஸா வென்றதும் உடனடியாக நைனா மரிக்காரையும் 89 பொதுத் தேர்தலை அடுத்து தமது பிரதமரான டி.பி. விஜேதுங்கவையும் நிதி அமைச்சராக நியமித்தார்.

பெரிதும் மதிக்கப்பட்ட றொனி டி மெல்லின் இடத்துக்குப் புதிதாக ஒரு நிதியமைச்சரை நியமித்த ஜனாதிபதி பிரேமதாஸா, நிதிஅமைச்சர் பதவிக்கு அப்படி ஒன்றும் ஜாம்பவான் தேவையில்லை, ஒரு டாக்ஸி டிரைவர் கூட அந்தப் பணியை ஆற்றலாம் என்று பகிரங்கமாகவே கூறினார்.

கல்வித் துறையில் பெரிய பின்புலத்தைக் கொண்டிராத – அல்லது அடைவு மட்டத்தை எட்டாத – ஒருவர் இன்று இலங்கையின் வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கையில், பிரேமதாஸாவின் அன்றைய கூற்றுத்தான் பலருக்கும் நினைவுக்கு வந்திருக்கும்.

இம்முறை வரவு – செலவுத் திட்ட விவாதத்தின் போது – குழுநிலை கருத்துப் பகிர்வுகளின் போது – சபையில் பெரும்பாலும் நிதி அமைச்சர் இருக்கவேயில்லை. அரசுத் தரப்பின் மூத்த அமைச்சர்கள் கூட சபையில் பிரசன்னம் தந்தமை குறைவாக இருந்தது என்றும் சுட்டப்பட்டது.

நிதி அமைச்சர் வேலையை ஒரு டாக்ஸி டிரைவரும் செய்யலாம் என்று எண்ணித்தான் அப்பதவியில் இருப்பவர் சம்ர்ப்பித்த வரவு – செலவுத் திட்ட விவாதங்களை அவரதும் தரப்பின் பெரிய கைகள் உதாசீனப்படுத்தினவோ என்னவோ....?

# நாட்டின் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு பெற்றோலிய கூட்டுத்தாபனமே காரணம்

## அநுர குற்றச்சாட்டு



நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு பெற்றோலிய கூட்டுத்தாபனமும் மின்சார சபையுமே முக்கிய காரணமென நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் மின்சார சபை ஆகியன எதிர்கொள்ள நேர்ந்துள்ள பாரிய நட்டத்திலிருந்து மீள்வதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களே தேவையென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அநுர பிரியதர்ஷன யாப்பா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த இரு துறைகளிலும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு விரிவான பேச்சு ஒன்றையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் எனவும் அநுர பிரியதர்ஷன யாப்பா வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை இந்தத் துறைகளுக்கு வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்ளாத பட்சத்தில் மேலும் பல பாதிப்புக்களை எதிர்காலத்தில் எதிர்நோக்க வேண்டிவரும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# இலங்கையில் கஞ்சா ஏற்றுமதியை விரைவில் சட்டபூர்வமாக்க முடிவு!

இலங்கையில் கஞ்சா ஏற்றுமதியை விரைவில் சட்டப்பூர்வமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே சுதேச மருத்துவத்துறை இராஜாங்க அமைச்சர், சட்டத்தரணி சிசிர ஜயக்கொடி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் மாதத்துக்குள் கஞ்சா ஏற்றுமதிக்கு அனுமதி வழங்குவதற்கான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவத் தேவையை அடிப்படையாகக் கொண்டு கஞ்சா ஏற்றுமதியை வலுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கஞ்சா பயிர்ச்செய்கையை சட்டப்பூர்வமாக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே அரசாங்கத்திடம் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தார்.

கஞ்சா பயிர்ச்செய்கையை சட்டப்பூர்வமாக்குவது அந்நிய செலாவணி நெருக்கடிக்குத் தீர்வுகளைக் கொண்டு வருவதோடு பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் எனவும் அவர் அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மின் தடை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பம்

## மின்சார சபை அறிவிப்பு

இலங்கையின் பல இடங்களில் செவ்வாய் இரவு பதிவாகிய மின் தடைகள் தொடர்பாக இலங்கை மின்சார சபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கையின் பல இடங்களில் செவ்வாய் 7.35 மணியளவில் மின் தடை ஏற்பட்டது. அதன்பின்னர் 9.00 மணியளவில் மின் விநியோகம் வழமைக்குத் திரும்பியதாக மின்சக்தி அமைச்சின் பேச்சாளர் சுலக்ஷனா ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கொத்மலை கிரிட் துணை மின் நிலையத்திலிருந்து பியகம கிரிட் துணை மின் நிலையத்துக்கு அனுப்பும் கம்பியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இவ்வாறு மின் தடை ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிவாயு சிலிண்டர் வெடிப்பு அரசாங்கத்தின் சதித்திட்டம்

## சாடுகிறது எதிர்க்கட்சி



எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவம், இந்தியாவில் இருந்து எரிவாயு சிலிண்டரை கொண்டுவருவதற்கான திட்டமாக இருக்கலாம் என எதிர்க்கட்சி உறுப்பினர் ரஞ்ஜித் மத்துமபண்டார சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற மின்சக்தி அமைச்சு மற்றும் வலுசக்தி அமைச்சு ஆகியவற்றின் வரவு -செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவித்த அவர் –

குறுகிய தினங்களில் இந்தளவு எரிவாயு சிலிண்டர்கள் வெடித்தமை தொடர்பில் நாங்கள் இதற்கு முன்னர் கேள்விப்பட்டதில்லை என்பதுடன் இந்த பிரச்சினையில் இருந்து அரசாங்கம் விலகிச்செல்லாமல் முறையான தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என ரஞ்ஜித் மத்தும பண்டார வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை நாங்கள் 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வரும்போது எரிவாயு விலை 2 ஆயிரத்து 313 ரூபாவாக இருந்தது. அதனை நாங்கள் ஆயிரத்தி 342 ரூபாவிற்குக் குறைத்தோம்.

ஆனால் அரசாங்கம் எரிவாயு விலையை 2ஆயிரத்தி 675 ரூபா வரை அதிகரித்திருக்கின்றது என அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், எரிவாயு சிலிண்டர் வெடிப்பதிலும் சதித்திட்டம் இருக்கவேண்டும் என்றே தோன்றுகின்றது.

இதற்கு காரணம் ஆட்சியாளரின் புதல்வர் ஒருவரின் பெயரில் இந்தியாவில் இருந்து எரிவாயு சிலிண்டரை கொண்டுவர திட்டமிட்டு வருவதாகத் தகவல் கசிந்துள்ளது எனவும் ரஞ்ஜித் மத்தும பண்டார கூறியுள்ளார்.

# ஸ்பெயினில் நீரில் மூழ்கிய கிராமங்கள் மீண்டும் தோன்றின



ஸ்பெயினில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் நீரில் மூழ்கிய 5 கிராமங்கள் நீர் வற்றியதால் மீண்டும் தோன்றியுள்ளன.

லிமியா நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணையின் நீர் மின் நிலையம், அணையின் மதகுகளை 1992 ஆம் ஆண்டில் மூடியதால் நீர் தேங்கி Ourense மாகாணத்தின் Aceredo உள்ளிட்ட 5 கிராமங்கள் நீரில் மூழ்கின. இந்த கிராமங்களில் உள்ள மக்கள் வெளியேற அரசு உத்தரவிட்ட நிலையில், வாழ்விடத்தை விட்டு வெளியேற முடியாது என கிராமவாசிகள் போர்க்கொடி தூக்கினர்.

அவர்களது முயற்சி பலனளிக்காத நிலையில் இருப்பிடத்தை விட்டு சென்றனர்.

இந்நிலையில், மீண்டும் தோன்றிய கிராமங்களில் உள்ள பெரும்பாலான வீடுகளின் கூரைகள் சேதமடைந்துள்ள நிலையில், சுவர்கள் அப்படியே இருப்பதால் பேய்கள் நடமாடும் பகுதி போல காட்சியளிக்கிறது.

# வெளிநாட்டினருக்கு தடை விதிக்கவுள்ளது இஸ்ரேல்




புதிய கொரோனா திரிவு பரவி வருவதையடுத்து வெளிநாடுகளில் இருந்து வருவோர் நாட்டுக்குள் நுழைவதற்கு இஸ்ரேல் 14 நாள்கள் தடை விதிக்க இருக்கிறது.

அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்ற பிறகு, இன்று நள்ளிரவு முதல் இந்தத் தடை அமுலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட ஒமிக்ரான் திரிவு இஸ்ரேலில் ஒருவருக்கு தொற்றியிருப்பது இதுவரை கண்டறியப்பட்டுள்ளது.

புதிய திரிவு கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு நாடுகள் தென்னாபிரிக்கா மற்றும் அதன் அண்டை நாடுகளில் இருந்து வருவோருக்கு பல நாடுகள் தடை விதித்திருக்கின்றன.

50 பிறழ்வுகளைக் கொண்ட இந்தத் திரிவை கவலைக்குரிய திரிவு என உலக சுகாதார அமைப்புவகைப்படுத்தியுள்ளது.



# பிரிட்டனிலிருந்து விடுபட்டு குடியரசாகின்றது பார்படோஸ்



ஒருகாலத்தில் பிரிட்டனின் காலணி ஆதிக்கத்தின் கீழ் இருந்த பார்படோஸ் நாடு, தற்போது பிரிட்டன் அரசியின் தலைமையை நீக்கிவிட்டு, குடியரசு நாடாக மாற இருக்கிறது. இதன்மூலம் கடந்த 400 ஆண்டுகளாக பிரிட்டனோடு இருக்கும் உடன்பாடு முடிவுக்கு வருகிறது.

இனி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபரே நாட்டின் தலைவராக இருப்பார்.

பார்படோஸ் நாட்டின் நம்பிக்கையின் வெளிப்பாடாக இந்த நடவடிக்கை பார்க்கப்படுகிறது. சுதந்திர நாடாக தன்னை அறிவித்துக் கொண்டு 55 ஆண்டுகளுக்குப் பிறகு, 1625ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்தோடு பார்படோஸை இணைத்து வைத்திருந்த எல்லா உடன்படிக்கைகளிலிருந்தும் கிட்டத்தட்ட தன்னை முழுமையாக விடுவித்துக் கொள்ள இருக்கிறது பார்படோஸ்.

கடந்த 30 ஆண்டுகளில், அரசி இரண்டாம் எலிசபெத்தை நாட்டின் தலைவர் பதவியிலிருந்து நீக்கும் முதல் நாடு பார்படோஸ்தான். கடைசியாக 1992ஆம் ஆண்டு மொரீஷியஸ் நாடு, தன் நாட்டின் தலைவர் பதவியிலிருந்து மகாராணி எலிசபெத்தை நீக்கியது.

இப்போதும் யுனைடெட் கிங்டம், ஆஸ்திரேலியா, கனடா, ஜமைக்கா போன்ற 15 நாடுகள் அரசி இரண்டாம் எலிசபெத்தை தங்கள் நாட்டின் ராணியாகக் கருதி மதித்து வருகிறது.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கும் சுற்றுலாத் துறையை அதிகம் நம்பியிருக்கும் இந்த நாட்டின் பொருளாதாரம் பெரும் சவால்களை எதிர்கொண்டு வருகிறது என ஏ.எவ்.பி. மற்றும் ராய்டர்ஸ் முகமைகளில் செய்தி வெளியாகியுள்ளது. காரணம், பிரிட்டனில் இருந்துதான் இந்நாட்டுக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வந்து போகின்றனர்.

பிரிட்டனின் அரசி இரண்டாம் எலிசபெத்தான் தற்போது பார்படோஸ் நாட்டின் தலைவராக (ஹெட் ஆஃப் ஸ்டேட்) பதவியில் உள்ளார். அவரது பிரதிநிதியாக ஆளுநர் ஜெனரல் சாண்ட்ரோ மசோன் இருக்கிறார்.

நாட்டின் தலைவர் என்ற பொறுப்பில் இருந்து பிரிட்டன் அரசியை நீக்குவது குறித்து கடந்த ஆண்டிலேயே பார்படாஸ் அறிவித்துவிட்டது. இதைத் தொடர்ந்து நாட்டின் முதல் அதிபர் தேர்தல் அண்மையில் நடந்து முடிந்தது.

இந்தத் தேர்தலில் சாண்ட்ரோ மசோன் வெற்றி பெற்றார். வரும் வாரத்தில், மகாராணி இரண்டாம் எலிசபெத்துக்கு பதிலாக, அவர் தலைவராக பொறுப்பேற்க உள்ளார்.

வரும் 30ஆம் திகதி நடக்கும் விழாவில் சாண்ட்ரோ மசோன் பார்படோஸ் நாட்டின் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, பல நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. அதில் அந்நாட்டின் இராணுவ அணிவகுப்புகளும் அடக்கம்.

இந்த நிகழ்ச்சியில், இளவரசர் சார்லஸ் கலந்து கொள்ள உள்ளார் எனவும் செய்திகள் வெளியானமை நினைவுகூரத்தக்கது.

சுமார் 2.85 லட்சம் பேரைக் கொண்ட சிறிய தீவு நாடான பார்படோஸ், 1834ஆம் ஆண்டு வரை கிட்டத்தட்ட 200 ஆண்டுகளுக்கு அடிமை முறையை எதிர்கொண்டு வந்தது. 1966ஆம் ஆண்டு தான் முழுமையாக சுதந்திரமடைந்தது.

பார்படோஸ் நாட்டை ஆங்கிலேயர்கள் கைப்பற்றிய போது அங்கு மக்கள் அதிகம் வசிக்கவில்லை. புகையிலை, பருத்தி, இண்டிகோ, சர்க்கரை பயிரிட நிலம் பயன்படுத்தப்பட்டது. வெகு சில தசாப்தங்களில் பார்படோஸ் ஆங்கிலேயர்களின் முதல் லாபகரமான அடிமை சமூகங்களைக் கொண்ட பிராந்தியமானது.

1627 முதல் 1833 வரையிலான ஆண்டுகளுக்கு மத்தியில், ஆறு லட்சம் ஆபிரிக்க அடிமைகள் வந்து சேர்ந்தனர். அவர்கள் சர்க்கரை பயிரிடும் பணியில் அமர்த்தப்பட்டனர். 1838ஆம் ஆண்டு வரை அடிமைமுறை இருந்தது. 1966ஆம் ஆண்டு தான் பார்படோஸ் முழுமையாக சுதந்திரம் பெற்றது.

எங்கள் காலணி ஆதிக்க வரலாற்றை முழுமையாக கைவிடும் நேரம் வந்துவிட்டது என பார்படோஸ் நாட்டின் பிரதமர் மியா மொட்டெலி கடந்த 2020ஆம் ஆண்டு ஓர் உரையில் குறிப்பிட்டார்.

# தங்க வேட்டைக்காக அமேசான் நதியில் குவியும் படகுகள்

*சட்டவிரோதமாக செயல்படும் தங்கச் சுரங்கங்களுக்குச் சொந்தமான நூற்றுக் கணக்கான அகழ்வுப் படகுகள் அமேசானின் மதேரா நதியில் தங்க வேட்டைக்காக குவிந்துள்ளன. பிரேஸிலின் அமேசான் காடுகளில் தங்கச் சுரங்கங்கள் இருக்கின்றன என வெளியான செய்தியைத் தொடர்ந்து தங்க வேட்டை செய்யபலர் முயன்றுள்ளனர். கிளாஸ்கோ பருவநிலை மாற்ற மாநாட்டில் அமேசான் மழைக்காடுகளைப் பாதுகாப்பது குறித்து உறுதியளித்துள்ள நிலையில், நூற்றுக்கணக்கான படகுகள் தங்கத்துக்காக அமேசான் நதிகளில் குவிந்துள்ளன. பம்புகள் பொருத்தப்பட்ட மிதவைப் படகுகள் நீண்ட மதேராநதி முழுவதும் ஆக்கிரமித்துள்ளன எனவும், இவை தங்கத்துக்காக ஆற்றுப்படுகைகளைச் சுரண்டி வெற்றிடமாக்கி வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. 300க்கும் மேலான படகுகள் இரண்டு வாரங்களாக நதியில் மிதந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பிரேஸிலின் கிரீன்பீஸ் செயற்பாட்டாளர் டேனிக்லி அகுயர் கூறியுள்ளார்*

*மேலும் வலதுசாரி அதிபர் ஜெய்ர் போல் சனோரா 2019இல்பொறுப்பேற்றதிலிருந்து சுற்றுச்சூழல் ஒழுங்குமுறை அமைப்பு மிகவும் வலுவிழந்துள்ளதாகவும், சட்டவிரோதமாக அமேசான் காடுகளில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களையும் தங்கச் சுரங்க நடவடிக்கைகளையும் கண்டுகொள்ளாமல் இருக்கின்றனர் எனவும் குற்றச்சாட்டு உள்ளது. மதேரா நதி சுமார் 3,300 கி.மீ. தொலைவு உள்ளது. இந்த நதியில் தொடர்ந்து சட்டவிரோத அகழ்வு படகு களின் நடமாட்டம் அதிகரித்து வருகிறது. ஆனால், சட்டவிரோத தங்க வேட்டை யைத் தடுக்க இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.*




# தமிழகத்தில் மீண்டும் தமிழ்ப்புத்தாண்டுத் திகதியில் மாற்றமா? உத்தியோகபூர்வ அறிவிப்பில்லையென அதிகாரிகள் தெரிவிப்பு

கடந்த 2008 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின்போது தை முதலாம் திகதியே தமிழ்ப் புத்தாண்டு என அப்போதைய முதலமைச்சர் கருணாநிதியால் அறிவிக்கப்பட்டது. 2011 இல் அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது அப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதா கடந்த 23.8.2011 இல் சித்திரை மாதம்தான் தமிழ்ப் புத்தாண்டு என அறிவித்தார். மீண்டும் தற்போது தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள நிலையில், தை ஒன்றுதான் தமிழ்ப்புத்தாண்டு அறிவிப்பு வெளியிடவுள்ளதாக தகவல் வெளியாகி வருகின்றது.

பொங்கல் பண்டிகையின்போது நியாய விலை அட்டைதாரர்களுக்கு கொடுக்கப்படவுள்ள 20 இலவசப் பொருள்கள் கொண்ட துணிப்பையில், 'இனிய தமிழ்ப் புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துகள்' என அச்சிடப்பட்ட படங்கள் வெளியாகியுள்ளன. ஆயினும், 2022ஆம் ஆண்டுக்கான அரசின் பொது விடுமுறைத் திகதிகளில் சித்திரை முதலாம் திகதி தமிழ்ப் புத்தாண்டு என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தக் குழப்பம் குறித்து தமிழக அரசு உயர் அதிகாரிகளிடம் வினவப்பட்டபோது, தமிழ்ப் புத்தாண்டுத் திகதியை தை முதலாம் திகதிக்கு மாற்றுவது குறித்து இதுவரை அரசுத் தரப்பில் இறுதி முடிவுஎடுக்கப்படவில்லை, எனதெரிவித்துள்ளனர்.

# ஆறுமுகசாமி ஆணைய வழக்கு; விசாரணைத் தீர்ப்பு ஒத்திவைப்பு



தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட ஆறுமுகசாமி ஆணையத்தில் முன்னிலையாவதில் இருந்து சமீபத்தில் அப்போலோ மருத்துவமனை விலக்குக் கோரியிருந்தது.

அப்போலோ மற்றும் தமிழக அரசு சார்பில் குழுவை விரிவுபடுத்துதல், மருத்துவர்களை குழுவில் இணைத்தல் போன்ற பல்வேறு வாதங்களும் கருத்துகளும் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில் இன்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, ஆணையத்தின் செயல்பாடு மற்றும் மருத்துவக்குழு உள்ளிட்டவை குறித்து விரிவான தீர்ப்பு வழங்கப்படும் என்று உறுதியளித்த நீதிபதிகள் தீர்ப்பை ஒத்திவைத்தனர்.

# கொரோனாத் தடுப்பூசி போடாத ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென கேரளா அறிவிப்பு



கேரளாவில்கொரோனா பாதிப்பு சற்று குறைந்ததை தொடர்ந்து அங்கு பாடசாலைகள், கல்லூரிகள் திறக்கப்பட்டன. கல்வி நிலையங்களுக்கு பணிபுரிய வரும் ஆசிரியர்கள் அனைவரும் கொரோனாத் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் என கேரள கல்வித் துறை அறிவித்தல் விடுத்திருந்தது. அதற்கான கால அவகாசமும் வழங்கப்பட்டது.


கல்வி நிலையங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதம் ஆன நிலையில் இன்னும் பல ஆசிரியர்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளவில்லை என தற்போது புகார்கள் கிளம்பியுள்ளன.

இது பற்றி கேரள கல்வித் துறை மந்திரி சிவன் குட்டி தகவல் வழங்கும்போது, கேரளாவில் கல்வி நிலையங்கள் திறந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. ஆனால் இன்னும் பல ஆசிரியர்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை என தெரியவந்துள்ளது. தடுப்பூசி போடத் தயாராக இல்லாத ஆசிரியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். உடல் நலக்குறைவு காரணமாக தடுப்பூசி போடாத ஆசிரியர்கள் பற்றி ஆய்வு செய்ய மருத்துவ நல வாரியம் அமைக்கப்படும். மருத்துவக் குழுவிடம் அனுமதி பெறாதவர்கள் கண்டிப்பாக தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும். தடுப்பூசி செலுத்தத் தயக்கம் காட்டினால் அத்தகையோர் மீது பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும், என்று கூறியிருக்கிறார்.

கொரோனாத் தடுப்பூசி போடாதவர்களுக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டால் அவர்களுக்கு அரசின் இலவச மருத்துவ வசதிகள் கிடைக்காது, என்று கேரள முதலமைச்சர் பினராய் விஜயன் தெரிவித்துள்ளார்.

இதுபோல தடுப்பூசி போடாத ஆசிரியர்கள் ஒவ்வொரு வாரமும் கொரோனாப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்றும், அவர்கள் தமக்குக் கொரோனா இல்லை என்பதற்கான ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோதனைச் சான்றிதழை வழங்க வேண்டும் எனவும் அறிவித்துள்ளார்.

# வெள்ளிக்கிழமை உருவாகும் புயல் ஜாவத் எனப் பெயரிடப்படவுள்ளது



தெற்கு தாய்லாந்து மற்றும் அதனையொட்டிய கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இது தெற்கு அந்தமான் கடல் பகுதிக்கு நகர்ந்து வந்து இன்று தீவிர காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக அது மாறியுள்ளதாகவும், நாளை அது புயல் சின்னமாக மாற வாய்ப்பு உள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த புயல் சின்னம் நாளை மேற்கு வடமேற்கு திசையில் நகரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்த புயல் சின்னத்தால் தமிழக கடலோர பகுதிகளில் சில இடங்களில் லேசான மழை பெய்யும்எனவானிலைஆய்வுமையம்தெரிவித்துள்ளது.

நாளை மறுதினம் இந்தப் புயல் சின்னம் புயலாக மாறலாமெனவும், அப்போது அதன் சீற்றம்பலமடங்குஅதிகரிக்கவாய்ப்புள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடலில் கொந்தளிப்பு காணப்படும் என்பதால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

3ஆம் திகதி உருவாகுமென எதிர்பார்க்கப்படும் புயலுக்கு ஜாவத் என்று பெயர் சூட்டப்படவுள்ளது. இது சவுதி அரேபியா வழங்கிய பெயராகும். ஜாவத் என்றால் அரபு மொழியில் கருணை என்று அர்த்தம். ஜாவத் புயல் காரணமாக தமிழகத்தில் மீண்டும் கன மழைக்கு வாய்ப்பு இல்லை என்று இந்திய வானிலை ஆய்வு மையம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. 3ஆம் திகதி பிற்பகலுக்குப் பிறகு குறித்த புயல் வடக்கு திசை நோக்கி மேலும் நகர்ந்து, அதன் பிறகு அது வடக்கு ஆந்திரா, தெற்கு ஒடிசா கடலோரப் பகுதியை நெருங்கும் எனவும் அப்போது ஆந்திரா, ஒடிசா கடலோர பகுதிகளில்பலத்தமழைமுதல்மிகப்பலத்தமழை பெய்யும்என்றும்எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் 4ஆம் திகதி ஜாவத் புயல் கரையை கடக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளை மறுநாள் அது நகரும் திசையைப் பொறுத்து வடக்குஆந்திரா, தெற்குஒடிசாபகுதிகளுக்கிடையே எந்தப் பகுதியில் கரையை கடக்கும் என்பது தெரியவருமெனஆய்வுமையம்குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையே அரபிக் கடலில் உருவாகிவரும் மற்றொரு காற்றழுத்த தாழ்வு பகுதி, மகாராஷ்டிரா-கோவா இடையே நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக உருவாகிவரலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது வலுவடைந்து வடக்குத் திசை நோக்கி நகர்ந்து குஜராத் கடலோரத்தை சென்றடையும். இந்த குறைந்த காற்றமுத்தம் காரணமாக மகாராஷ்டிராவில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மும்பையில் இன்று மிகப் பலத்த மழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.



# திருப்பதிப் பயணத்தை ஒத்திவைக்குமாறு பக்தர்களுக்கு தேவஸ்தானம் வேண்டுகோள்

கொரோனாத் தொற்றுக் குறைந்த நிலையில் திருப்பதி ஏழுமலையானை பக்தர்கள் தரிசிக்க சில விதிகளை தளர்த்தி கோவில் தேவஸ்தானம் அனுமதி அளித்திருந்தது. இதனையடுத்து முன்பதிவு அடிப்படையில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வந்தனர்.

அண்மையில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் திருப்பதியில் உள்ள பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டன. அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனங்களும் மழை வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டன. மேலும், மலைப்பாதை உள்பட சாலைகளும் சேதம் அடைந்தன.

இந்தநிலையில் திருப்பதியில் சாமி தரிசனம் செய்யத் திட்டமிட்டுள்ள பக்தர்கள் தங்கள் பயணத்தை 15 நாள்கள் வரை ஒத்திவைக்க வேண்டும் என்று தேவஸ்தானம் கோரிக்கை விடுத்துள்ளது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளை சீரமைக்கும் பணி தற்போது நடைபெறுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

10 முதல் 15 நாள்களுக்குப் பின்னர் பக்தர்கள் திருப்பதிக்கு வந்து முன்பதிவு செய்திருந்த அதே பற்றுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி சாமி தரிசனம் செய்யலாம் என்றும் தேவஸ்தானம் கேட்டுக்கொண்டுள்ளது.

# மட்டக்களப்பு உள்ளூராட்சி சபைகளின் தற்காலிக ஊழியர்கள் போராட்டம்




மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிசபைகளில் கடமையாற்றும் தற்காலிக ஊழியர்கள் தங்களை நிரந்தர மாக்குமாறு வலியுறுத்தி இன்று காலை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேசசபைகள், நகர சபைகளில் கடமையாற்றும் தற்காலிக ஊழியர்களே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். பதிலீட்டு அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வேண்டும் என்னும் தலைப்பில் இன்றையதினம் அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 'எங்களுக்கும் நியாய மான தீர்வு வேண்டும், இந்த அரசாங் கத்தையே நம்புகின்றோம், எமக்கும் நிரந்தர நியமனம் வேண்டும், எமது சேவைக்கும் மதிப்பளியுங்கள்'போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் பிரதேசசபை யின் தவிசாளர் யோ.ரஜனியிடம் வழங்கி வைக்கப்பட்டது.

அந்த மகஜரில், நாங்கள் போர தீவுப்பற்று பிரதேச சபையில் ஆறு வருடங்களுக்கு மேலாக தற்காலிக அமைய மற்றும் பதிலீட்டு ஊழியர்களாகக் கடமையாற்றி வருகின்றோம் என்பது தாங்கள் அறிந்ததே இச்சபையுடைய வருமானம். சேவை மற்றும் ஏனைய ஒவ்வொரு செயற்பாடுகளிலும் எமது சேவைகள் அளப்பெரியது நாங்கள் எந்த நிலைமைகளிலும் காலம் நேரம் பாராது முழுமனதுடன் சேவையாற்றுவதுடன் சூழல் சுத்திகரிப்பு மற்றும் அனர்த்த நிலைமை காலங்களிலும் தற்போதைய கொவிட்-19 தொற்றுநோய் நிலைகளிலும் எமது சுகாதாரத்தினையும் உயிரையும் துச்சமாக மதித்து பொதுநல செயற்பாடு களில் இப்பிரதேச சபையுடன் ஒன்றிணைந்து பாடுபட்டு உழைத்து வருகின்றோம்.

அத்துடன் மாதாந்த குறைந்த ஊதி யத்தினை பெற்று வருகின்றபோதிலும் இப்பிரதேச சபையின் சேவை. முன்னேற் றம் அபிவிருத்தி போன்றவற்றிற்கு அயராது உழைக்க தவறியதேயில்லை.

எமது ஒவ்வொரு ஊழியர்களினதும் குடும்பம் எங்களது குறைந்த மாதாந்த வருமானத்தைக் கொண்டு தற்பொழுது ஏற்பட்டுள்ள விலைவாசி அதிகரிப்புக்கு முகம்கொடுத்து வாழ வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கும் தள்ளப்பட் டுள்ளோம். மேலும் நாங்கள் 6 வருடங்களுக்கு மேல் இவ்வாறு பாரிய சேவையை இச்சபைக்கு வழங்கியபோதி லும் இன்றுவரை எங்களுக்கான எந்தவித நிரந்தர நியமனமும் வழங்கப்படாமை யினால் எங்களை புறக்கணிப்பதாக உணர்வதுடன் உளரீதியான பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளோம். அத்துடன் எங்களில் மாறுபட்ட வயது உடையவர்களுக்கு இன்னும் கால நீடிப்பினால் நிரந்தர நியம னம் பெற்றுக்கொள்வதில் பெரும் சிக்கல் நிலை ஏற்படும் என்பதனையும் தங்களின் மேலான கவனத்துக்கு அறியத் தருகின்றோம். ஆகவே எமது நிலைமை யையும் தங்களது கவனத்தில் கொண்டு வயது மற்றும் எதிர்காலநன்மை கருதி எங்களுக்கு நிரந்தர நியமனத்தை மிக விரைவாக பெற்றுத் தருமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம் என உள்ளது.



## காணியை மீட்டுத் தருமாறு கோரி திருமலையில் கவனவீர்ப்பு போராட்டம்

திருகோணமலை, மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 4ஆம் வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த மக்கள், தங்களுடைய சொந்தக் காணிகளை தமக்கு மீட்டுத் தருமாறு கோரி, திருகோணமலை மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

1983ஆம் ஆண்டு, தமது சொந் தக் காணிகளை விட்டு வெளியேறி, இந்தியாவிலும் அகதி முகாம்களிலும் வாழ்ந்து வந்தோம் எனவும் தற்போது தங்களுடைய காணிகளுக்குள் செல்ல விடாமல் தடுப்பதால், தமக்குரிய காணிகளை அரச அதிகாரிகள் பெற்றுத்தர வேண்டுமெனவும் அவர் கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யுத்த காலத்தின் போது 83 குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் காணிகள் கைவிடப்பட்ட நிலையில், தற்போது அக்காணிகளில் வேறு பிரதேசங்களிலிருந்து வந்தவர்களால் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன எனவும் ஆர்ப் பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமக்கு உரிய ஆதாரங்கள் காணப்படுகின்ற போதிலும், மொர வெவ பிரதேச செயலக அதிகாரிகள் இது குறித்து கவனம் செலுத்தவில் லையெனவும் தமிழ் மக்களுக்குரிய காணிகளை அழிக்கும் நடவடிக்கை யில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர் கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இந்நிலை யில், குறித்த காணிகள் தொடர்பில், திருகோணமலைமாவட்டச்செயலாளர் சமன் தர்ஷன பாண்டி கோரள விசார ணைகளை மேற்கொண்டு, எதிர்வரும் டிசெம்பர் 30ஆம் திகதிக்குள் சம்பந் தப்பட்ட வர்களுக்கு உரிய தீர்வை பெற்றுக் கொடுப்பேன் என வாக்குறுதி வழங்கியுள்ளார்.

### மத்தியஸ்த சபை

## புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்கு மட்டக்களப்பில் நேர்முகத் தேர்வு



நீதி அமைச்சின் கீழ் இயங்கும் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் பிரதேச செயலகம் தோறும் மத்தியஸ்த சபையின் புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மத்தியஸ்த சபையின் பதவி வறிதாகுகின்ற உறுப்பினர்களுக்கு பதிலாக மீண்டும் உறுப்பினர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை மாலை இடம் பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் இடம் பெற்ற நேர்முகப் பரீட்சையில் மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எம்.ஐ.ஆஸாத் மற் றும் நீதி அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

35 பேர் இந் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொண்டனர் என பிரதேச செயலாளர் வீ. தவராஜா தெரிவித்தார்.

## சூரன்போர் நடாத்தியமைக்கு திருக்கோவிலில் விசாரணை

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்தில் இம்முறை முறையான அனுமதியின்றி சூரன்போர் நடாத்தியமைக்கு எதிராக ஆலயநிருவாகம் மீது, திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வழக்குத்தொடுத்துள்ளார்.

ஆலயவளாகத்தில் முறையான அதிகாரியின் அனுமதி யினைப் பெறாமல் சூரன்போர் நிகழ்விற்கு பொதுமக் களை ஒன்றுகூட்டியமை, சமூகஇடைவெளி பேணப்ப டாமை, முகக்கவசம் அணியாமை ஆகிய குற்றச்சாட்டுக் களை முன்வைத்து இவ்வழக்குத்தாக்கல் செய்யப் பட்டிருக்கிறது.

திருக்கோவில் பிரதேச சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் பி.மோகனகாந்தன் முறைப்பாட்டாளராக அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் இந்த வழக் கைத்தாக்கல் செய்துள்ளார்.

வழக்கை ஏற்றுக்கொண்ட நீதிவான் நீதிமன்றம், இதற்கான நீதிமன்ற வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 13ஆம்திகதிகாலை 9மணிக்குநடைபெறும்என்றும், ஆலய நிருவாகத்தினர் ஆஜராகவேண்டும் என்று நீதிமன்று அழைப்புக்கட்டளை அறிவித்தல் கொடுத்திருக்கிறது.

திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் உள்ளிட்ட நிருவாசபை உறுப்பினர்களுக்கு இவ்வறிவித்தல், அந்தந்த பிரதேச பொலிஸ் நிலையமூடாக கையளிக் கப்பட்டிருக்கின்றது.

தேசத்துக்கோவில் என்பதால் ஆலயநிருவாகசபை உறுப்பினர்கள் மாவட்டத்தின் பலபாகங்களிலும் இருப்பதும், இவ்வருட வருடாந்த ஆடிஅமாவாசை மஹோற்சவம் கொரோனாகாரணமாக நடாத்தப்பட வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



# பங்களாதேஷை வீழ்த்தியது பாகிஸ்தான் டெஸ்ட் அணி

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.


சட்டொக்ராமில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் பங்களாதேஷ் அணி தமது முதல்இன்னிங்ஸில்330ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. லிடொன் தாஸ் 114 ஓட்டங்களையும், முஸ்பிகுர் ரஹீம் 91 ஓட்டங்களையும் எடுத்தனர். பாகிஸ்தான் அணியின் ஹசன் அலி 5 விக்கெட்டுக்களையும், சகீன் ஷா அப்ரிடி, பஹீம் அஸ்ரப் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து தனதுமுதல்இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 286 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அபிட் அல் 133 ஓட்டங்களையும், அப்துல்லா சபிக் 52 ஓட்டங்களையும் பெற்றனர். தஜியுல் இஸ்லாம் 7 விக்கெட்டுக்களையும் எபடொட் ஹொசைன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இதையடுத்து, தனது இரண்டாம் இன்னிங்ஸை விளையாடிய பங்களாதேஷ் அணி, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. லிடொன் தாஸ் 59 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார். இந்த இன்னிங்சில் சகீன் ஷா அப்ரிடி 5 விக்கெட்டுக்களையும், சஜிட் கான் 3, ஹசன் அலி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

202 என்ற வெற்றி இலக்கை நோக்கி தனது இரண்டாம் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கையடைந்தது. அபிட் அலி 91ஓட்டங்களையும், அப்துல்லா சபிக் 73 ஓட்டங்களையும் எடுத்து பாகிஸ்தானின் வெற்றிக்கு வழிவகுத்தனர். போட்டியின் ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணியின் அபிட் அலி தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட்போட்டி வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# இந்திய – தென்னாபிரிக்க தொடர் ஒமிக்ரோன் வைரஸால் நடக்குமா?



இந்திய கிரிக்கெட் அணி தற்போது நியூசிலாந்துடனான கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. இந்தத் தொடர் முடிந்த பின்னர் இந்தியஅணிதென்னாபிரிக்காவுக்குசுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டி, நான்கு ரி-20 போட்டிகளில் விளையாடத் திட்டமிட்டுள்ளது.

முதல் டெஸ்ட் போட்டி வருகிற 17 ஆம் திகதி ஜோகன்ஸ்பெர்க்கில் தொடங்கவுள்ளது. ஜனவரி 26ஆம்திகதி வரை இந்திய அணி தென்னாபிரிக்காவில் விளையாடுவதற்கான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கொரோனாவின் புதிய உருமாற்றமான ஒமிக்ரோன் வைரஸ் அச்சுறுத்தல் உலகம் முழுவதும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. தென்னாபிரிக்காவில்தான் இந்த வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்திய அணி தென்னாபிரிக்காவுக்குச் செல்லுமா, என்ற கேள்வி எழுந்துள்ளது.

தென்னாபிரிக்கத் தொடருக்கான இந்திய அணி கான்பூர் டெஸ்ட் முடிந்த பிறகு அறிவிக்கப்படும் என்று தெரிவித்திருந்தது. ஆனால், தற்போது தேர்வுக் குழுக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்திய அணி தென்னாபிரிக்கா செல்வது தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்ச் சபைத் தலைவரான கங்குலி கருத்துத் தெரிவித்துள்ளார். தற்போது வரை உள்ள சூழ்நிலையில் சுற்றுப்பயணம் செய்யமுடியும் என்ற முடிவே எம்மிடம் இருக்கிறது. முடிவெடுக்க எங்களுக்கு இன்னும் நேரம் இருக்கிறது. டிசெம்பர் 17 ஆம் திகதி முதல் டெஸ்ட் போட்டிகள் நடைபெறத் திட்டமிடப்பட்டு உள்ள நிலையில் நாங்கள் இன்னும் சிந்திக்க வேண்டியுள்ளது. வீரர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்துக்கு கிரிக்கெட் சபை எப்போதுமே முதல் முன்னுரிமையை கொடுக்கும். இதற்காக நாங்கள் முடிந்த அனைத்தையும் செய்வோம். வரும் நாள்களில் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம், என்று அவர் கூறியிருக்கிறார்.

# இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 3 ஓட்டங்கள் பின்னிலையில் இலங்கை

மேற்கிந்தியத் தீவுகள் - இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடும் இலங்கையணி இரண்டு விக்கெட்டுக்களை ரன் அவுட் முறையில் இழந்து தடுமாற்றமான நிலையில் உள்ளது.

காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றுவரும் இந்தப் போட்டியில் தனது முதல் இன்னிஸ்ஸில் இலங்கையணி 204 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மேற்கிந்தியத் தீவுகளின் வீரசமி பெர்மோள் தன்னுடைய அதிசிறந்த டெஸ்ட் பந்து வீச்சுப் பெறுதியோடு 5 விக்கெட்டுக்களையும், ஜோமெல் வரிகன் 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இலங்கையின் பதும் நிசங்க 73 ஓட்டங்களும், திமுத் கருணாரத்ன 42 ஓட்டங்களும் சேர்த்தனர்.

மே.தீவுகள் தனது முதல் இன்னிங்ஸில் களமிறங்கி 253 ஓட்டங்களை எடுத்தது. அணித்தலைவர் பிரத்வைட் 72 ஓட்டங்களை எடுக்க, பிளக்வூட் 44 ஓட்டங்ளோடு ஆட்டமிழந்தார். இலங்கையணியின் ரமேஸ் மென்டிஸ் 6 விக்கெட்டுக்களையும், லசித் எம்புல்தெனிய, பிரவீன் ஜயவிக்ரம 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

49 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கையணி இன்றைய ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து 46 ஓட்டங்களை மட்டுமே எடுத்துள்ளது. அணித்தலைவர் திமுத் கருணாரத்ன 5 ஓட்டங்களை எடுத்தவேளையிலும் ஒசத பெர்னான்டோ 14 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோதும் ரன் அவுட்டாகியிருந்தனர்.

3 ஓட்டங்கள் பின்னிலையில் எட்டுவிக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் நாளை நான்காவது நாள் ஆட்டத்தில் தொடர்ந்து இலங்கையணி துடுப்பெடுத்தாடவிருக்கிறது.



# சென்னை அணி தக்கவைத்த வீரர்களில் ரவீந்திர ஜடேஜாவுக்கே பெறுமதி அதிகம்!

ஐ.பி.எல். 2022 சீசனில் 10 அணிகள் பங்கேற்கின்றன. இதில் 8 அணிகள் தாங்கள் தக்கவைக்கும் வீரர்கள் பட்டியலை அறிவிக்க நேற்று கடைசி நாள் என்பதால் வீரர்கள் தக்கவைப்பு பட்டியலை வெளியிட்டன. அந்த வகையில் நடப்பு சம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் ரவீந்திர ஜடேஜா, எம்.எஸ்.டோனி, ருதுராஜ் கெய்க்வாட், மொயின் அலி ஆகிய 4 வீரர்கள் தக்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதில் டோனியை விட அந்த அணியைச் சேர்ந்த சகலதுறை வீரரான ரவீந்திர ஜடேஜா அதிக விலைக்குத் தக்க வைக்கப்பட்டுள்ளார். ஜடேஜாவை இந்திய நாணய மதிப்பில் 16 கோடி ரூபா கொடுத்தும், டோனியை 12 கோடி ரூபா கொடுத்தும், மொயீன் அலியை 8 கோடி, ருதுராஜ் கெய்க்வாட்டை 6 கோடி ரூபா கொடுத்தும் தக்க வைத்துள்ளது அணி நிர்வாகம். இந்த 4 வீரர்களைத் தக்கவைக்க 42 கோடியைச் செலவிட்டுள்ளது சென்னை சூப்பர் கிங்ஸ்.

இதுகுறித்துப் கருத்துத் தெரிவித்த சென்னை அணியில் இம்முறை இடம்பிடித்திருந்த ரொபின் உத்தப்பா, முதலில் தக்கவைக்கும் வீரர் என்ற அடிப்படையில் ரவீந்திர ஜடேஜா தக்க வைக்கப்பட்டுள்ளார். ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இருந்து டோனி ஓய்வுபெற்ற பிறகு, சென்னை சூப்பர் கிங்க்ஸ் அணியின் அடுத்த கப்டனாக ரவீந்திர ஜடேஜா நியமிக்கப்படுவார் என்பதற்கான அறிகுறிதான் இது. சி.எஸ்.கே. அணியில் ஜடேஜாவின் மதிப்பு டோனிக்கு நிச்சயம் தெரியும், என்று குறிப்பிட்டுள்ளார்.

மற்றொரு வீரரான பார்த்தீவ் படேல், 'ஜடேஜா சி.எஸ்.கே. அணியின் அடுத்த கப்டனாக உரிமையாளரால் பார்க்கப்படுகிறார். ஒரு வீரராக ஜடேஜா அசத்திவருகிறார். தேசிய அணியில், டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறப்பாகச் செயல்பட்டுள்ளார். ஒருநாள் கிரிக்கெட்டிலும் அவர் 6 ஆவது இடத்தில் துடுப்பெடுத்தாடுவதைப் பார்த்தோம். ஜடேஜா கப்டன் பொறுப்பை ஏற்றுக்கொள்வதைப் பார்க்க விரும்புகிறேன். டோனி விளையாடுவதில்லை என்று முடிவு செய்தவுடன் ரவீந்திர ஜடேஜா கப்டனாக பொறுப்பேற்பார்' என நான் நினைக்கிறேன், என்று தெரிவித்திருக்கிறார்.

# ஒமிக்ரோன் கண்டறியப்பட்ட நாடுகளிலிருந்து வருகை தந்தவர்கள் தொடர்பாக ஆராய்வு

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி தகவல்



புதிய ஒமிக்ரோன் கொரோனா மாறுபாடு கண்டறியப்பட்ட நாடுகளில் இருந்து கடந்த 14 நாள்களில் எந்தவொரு தனிநபரோ அல்லது தரப்பினரோ இலங்கைக்கு விஜயம் செய்தார்களா என்பது தொடர்பாக சுகாதார அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர் என இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற சுகாதார அமைச்சின் குழுநிலை விவாதத்தின்போது கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். புதிய ஒமிக்ரோன் மாறுபாட்டின் அபாயம் உள்ள 15 நாடுகளில் இருந்து வரும் பார்வையாளர்களை இலங்கைக்குள் நுழைவதைத் தடுக்க கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் தடை விதித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். புதிய மாறுபாட்டைக் கண்டறிய கண்காணிப்பு மற்றும் மரபணு வரிசை முறைகள் பின்பற்றப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

மாறுபாட்டின் பரவலின் அபாயத்தையும் அது இறப்பு விகிதத்தை எவ்வாறு பாதிக்கும் என்பதையும் உலக சுகாதார அமைப்பு இன்னும் தீர்மானிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும் நோயாளியின் மேலாண்மை மற்றும் சிகிச்சை முறைகள் மற்ற வகைகளைப் போலவே உள்ளன, மேலும் முகமூடி அணிவது, ஒரு மீற்றர் தூரத்தை பராமரிப்பது மற்றும் தடுப்பூசிகளைப் பெறுவது போன்ற சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது முக்கியம் என்று உலக சுகாதார ஸ்தாபனம் எடுத்துரைத்ததாக அமைச்சர் கூறினார்.

இலங்கையில் மொத்த சனத்தொகையில் சுமார் 62.7 வீதம் பேர் ஏற்கனவே முழுமையாக தடுப்பூசி செலுத்தியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

# ஜேர்மன் தூதுவர் கென் சேயூபெர்ட் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு விஜயம்

ஜேர்மன் மொழிக்கான பாடசாலைகளின் இணையம் பி.ஏ.எஸ்.சி.ஏச். இணைந்து வடமாகாணத்தில் ஜேர்மன் மொழி கற்பிக்கப்படும் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கு நேற்று செவ்வாய்க்கிழமை ஜேர்மன் தூதுவர் கென். கொள்கெர் சேயூபெர்ட் விஜயம் மேற்கொண்டார்.

கல்லூரி நிர்வாகம் அவரை வரவேற்று கல்லூரியில் ஜேர்மன் மொழி கற்கும் மாணவர்களுடனான சந்திப்பொன்றையும் நிகழ்த்தினர்.

இந்த வேளையில் மாணவர்கள் ஜேர் மன் மொழியிலான பாடல்களையும் உரைகளையும் நிகழ்த்தியதோடு தமிழ் கலாசார நடனங்களையும் ஆற்றுகைப்படுத்தினர்.

தூதுவர் தமது உரையில் 2023 ஆம் ஆண்டு ஜேர்மன் - இலங்கை இடையிலான நட்புறவின் 70 ஆம் ஆண்டு நிறைவு செயற்பாடுகளுக்குசென் பற்றிக்ஸ் கல்லூரியின் ஒத்தாசையை நாடிநின்றதோடு கடந்த 10 ஆண்டுகளாக இந்தக் கல்லூரி ஜேர்மன் மொழி, கலாசார, பண்பாட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கி வரும் ஊக்கத்துக்கு நன்றி கூறி சர்வதேச ரீதியிலான ஒத்துழைப்பை யும் வாழ்த்தி நின்றார்.



# நாட்டின் சில பகுதிகளில் நேற்றும் சமையல் எரிவாயு விபத்து பதிவு!

நாட்டின் சில பகுதிகளில் நேற்றும் (செவ்வாய்க்கிழமை) சமையல் எரிவாயு தொடர்பான பல்வேறு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அதன்படி, மாத்தறை – நாவிமன, மீகொட – பானலுவ, மீரிகம, மொரட்டுவ – ராவதாவத்த, கெக்கிராவ ஆகிய பிரதேசங்களில் இவ்வாறு சமையல் எரிவாயு தொடர்பான விபத்துக்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கணனி கற்கை நிலையம் திறப்பு

*யாழ்ப்பாணம் சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலை பாடசாலையின் கணனி கற்கை நிலையம் நாளை பிற்பகல் 1 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.*

*இவ் கணனி கற்கை நிலையமானது வன்னி கோப் மற்றும் ரட்ணம் பவுண்டேசன் ஆகிய அமைப்புக்களின் நிதியுதவியில் அமைக்கப்பட்டுள்ளது.*

*விழாவின் பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளம் ஞானலிங்கம் ஆதவனும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் நா.அம்பிகைபாகனும் கலந்து கொள்ளவுள்ளனர்.*

# கொட்டகலை – பத்தனையில் வெடித்தது எரிவாயு சிலிண்டர்!



திம்புள்ள – பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை – பத்தனை பெய்திலி தோட்டத்தில் தோட்டத் தொழிலாளியின் வீட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் வெடிப்பு சம்பவம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

வீட்டில் இருந்த எரிவாயு சிலிண்டரில் பொருத்தப்பட்டிருந்த ரெகுலேட்டர் வெடித்துள்ளதுடன், ரெகுலேட்டரின் துண்டுகளையேனும் காண முடியவில்லை. மேலும் அதற்கான இறப்பர் குழாயும் முழுமையாக எரிந்துள்ளது.

தோட்டத் தொழிலாளிகளான பெற்றோர்கள் தொழிலுக்கு சென்றிருந்த நிலையில் பாடசாலையில் இருந்து வீடு திரும்பிய பெண் பிள்ளை தண்ணீரை சூடாக்குவதற்கு சமையல் அறையில் இருந்த காஸ் குக்கரை பற்றவைத்து விட்டு வீட்டினுல் இருந்த பொழுது பாரிய சத்தத்துடன் கபஸ் குக்கர் வெடித்துள்ளது.

காஸ் குக்கர் வெடிப்பு மற்றும் தீப்பற்றல் காரணமாக காஸ் குக்கர் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன் வீட்டின் மின் கட்டமைப்பு மற்றும் பொருள்களும் சேதமடைந்துள்ளன.

சமையலறையில் எவரும் இல்லாததன் காரணமாக எவருக்கும் ஆபத்துக்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொள்வனவு செய்யப்பட்ட எரிவாயு சிலிண்டரே இவ்வாறு வெடித்துள்ளது.

குறித்த நேரத்தில் பெற்றோரும் வீடு திரும்பிய நிலையில் எரிவாயு சிலிண்டரை தந்தை தூக்கி வெளியில் வீசி எறிந்தமை காரணமாக, ஏற்படவிருந்த பெரும் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது. அத்தோடு, ஒன்றுகூடிய அயலவர்களும் பரவிய தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இந்த விடயம் சம்பந்தமாக குறித்த பகுதிக்கான கிராம உத்தியோகத்தருக்கும் திம்புள்ள – பத்தனை பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.12.2021இல் வெளியிடப்பெற்றது.